# புதிய விடியல் தந்த ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகளை எடுத்துரைப்போம்!

## கழகப் பொதுக்குழு தீர்மானம்... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

நான்காண்டுகளில் 121 மீன்வள உட்கட்டமைப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூ.1,849 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 2023-ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவ மக்களுக்கான சிறப்பு மாநாட்டில் கழகத் தலைவர் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, 1,000 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான மீனவர் நலத்திட்டங்களை அறிவித்து அவற்றைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார். இப்படி, ஒவ்வொரு சமுதாயத்துக்கும் பார்த்து பார்த்து திட்டங்களைச் செயல்படுத்துகிற மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கப் பரப்புரை செய்வோம்!

**தீர்மானம் : 5**

**தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த தலைவர்களைப் போற்றும் கழக அரசுக்குப் பாராட்டு!**

தமிழ்மொழிக்கும் - இனத்திற்கும் - பண்பாட்டிற்கும் தொண்டாற்றிய தகைசால் தலைவர்களையும், இந்திய ஒன்றிய மக்களால் மதிக்கப்படும் தலைவர்களையும் பாராட்டிப் போற்றுவதில் தி.மு.கழக அரசே எந்நாளும் முன்னோடியாகத் திகழ்கிறது. பேரறிஞர் அண்ணா ஆட்சியில் கடற்கரையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சான்றோர் சிலைகள், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் குமரி முனையில் அமைக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை, பல தலைவர்களுக்கான நினைவிடங்கள் - மணி மண்டபங்கள் - திருவுருவச் சிலைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, கடந்த 4 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு தலைவர்களின் நினைவையும் அவர்தம் புகழையும் போற்றும் விதத்தில் சிலைகளும் நினை வரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகள், சிந்துவெளி ஆய்வை வெளியிட்ட சர் ஜான் மார்ஷல் ஆகியோருக்குச் சிலை, அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் அவரது முழு உருவச் சிலை, கிண்டி காந்தி மண்டபத்தில் திராவிடப் பேரொளி அயோத்திதாசப் பண்டிதருக்குச் சிலையுடன் மணிமண்டபம், காந்தி மண்டப வளாகத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி ஆகியோருக்குச் சிலைகள், உத்தர பிரதேச மாநிலம் காசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக்கப்பட்டு அவருக்கு மார்பளவுச் சிலை, வன்னிய சமுதாயத்தின் இடஒதுக்கீட்டிற்கான போராட்டத்தில், அன்றைய ஆட்சியாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சமூகநீதித் தியாகிகளுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் சிலைகளுடன் மணிமண்டபம், பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த 14 தியாகிகளுக்கான நினைவு மண்டபம், திருச்சியில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம், எம்.கே.தியாகராஜ பாகவதர் ஆகியோருக்கு மணி மண்டபங்கள், முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களுக்குச் சிலையுடன் அரங்கம், கடலூரில் விடுதலைப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் சிலை, திரு. இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம், மயிலாடுதுறையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் சிலை, புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சிலை, நாமக்கல் ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் சிலை, திரு. டி.எம்.சௌந்திரராசன், டாக்டர் ப.சுப்பராயன், நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கனார், விடுதலைப் போரில் களம் கண்ட வீரமங்கை வேலுநாச்சியார், வீராங்கனை குயிலி, வீரன் சுந்தரலிங்கம், வீரன் வெண்ணி காலாடி, வீரன் வாளுக்கு வேலி அம்பலம், தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் சிலை, சமூகநீதிக் காவலர் வி.பி.சிங், கவியரசர் இரவீந்திர நாத் தாகூர், டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம், வீரமாமுனிவர், இனமானப் பேராசிரியர், நாவலர் நெடுஞ்செழியன், ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ், எழுத்தாளர் கி.ராஜநாராயணன் உள்ளிட்ட பலரது தியாகத்தையும் தொண்டையும் புகழையும் மதித்துப் போற்றி சிலைகளும் நினைவிடங்களும் அமைத்ததோடு, வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகத்தைப் புதுப்பித்து, பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளில் தமிழ் வார விழா கொண்டாடி, குமரியின் வள்ளுவ முனையில் வானுயர எழுந்து நிற்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவை கொண்டாடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசுக்கு இப்பொதுக்குழு பாராட்டுகளைத் தெரிவித்து, திராவிட மாடல் ஆட்சியில் தற்போது அமைக்கப்பட்டு வரும் திருவாளர்கள் பி.கே.மூக்கையா தேவர், டபிள்யூ.பி.ஏ.சௌந்திரபாண்டியனார், சி.சுப்பிரமணியம், பொள்ளாச்சி மகாலிங்கம், கே.பழனிசாமி கவுண்டர், புதுக்கோட்டை மன்னர் ராஜகோபால தொண்டைமான், மாயூரம் வேதநாயகம், பெரியவர் இளையபெருமாள், திரு.இமானுவேல் சேகரன், தோழர் ப.ஜீவானந்தம், கொடிகாத்த குமரன், மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி, அறிவியலாளர் ஜி.டி.நாயுடு, தமிழ் அச்சுத்துறையின் முன்னோடி சீகன் பால்கு, பட்டுக்கோட்டை வை.நாடிமுத்து பிள்ளை, பால்வளத் தந்தை எஸ்.கே.பரமசிவன் அய்யா, கரூர் சி.முத்துசாமி ஆகியோருக்கான சிலைகள் மற்றும் அவர்கள் பெயரிலான நினைவிடங்கள், மாமேதை கார்ல் மார்க்ஸ், சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ ஆகியோருக்குத் திருவுருவச் சிலைகள் என சிறப்பு செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசை வாழ்த்தி, நாடும் மொழியும் மானுட சமுதாயமும் சிறந்து வாழ, நாளும் உழைத்தவர்களின் நினைவை இப்பொதுக்குழு போற்றிப் புகழ்கிறது.

**தீர்மானம் : 6**

**ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்றுள்ள திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களைத் தொடர்ந்து மக்களிடம் எடுத்துரைப்போம்!**

திராவிட நாயகராம் நம் கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே,

- மகளிர் கட்டணமில்லாமல் பேருந்துகளில் பயணம் செய்யும் விடியல் பயணம் திட்டத்திற்குக் கையெழுத்திட்டு, அதன் தொடர்ச்சியாக அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் -
- ‘மக்களைத் தேடி மருத்துவம்’,
- ‘இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48’
- ஏழை-நடுத்தர மக்கள் அன்றாட - அத்தியாவசியத் தேவைக்குப் பயன்படுத்தும் மருந்துகளைக் குறைந்த விலையில் பெறுவதற்கேற்ற ‘முதல்வர் மருந்தகங்கள்’ போன்ற மகத்தான மருத்துவத் திட்டங்களையும், மாணவர் நலன் போற்றும் -
- ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’
- ‘நான் முதல்வன்’,
- ‘இல்லம் தேடிக் கல்வி’,
- ‘புதுமைப் பெண்’,

‘தமிழ்ப் புதல்வன்’ உள்ளிட்ட கல்விக்கான சிறப்பான திட்டங்களையும்,

- ஏறத்தாழ 30 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியும்,

10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்தும் தமிழ்நாட்டின் தொழிற்புரட்சியைப் பெருக்கி,

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியத்துடன் அனைத்து சமுதாய மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தியும்,

- அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்,
- கலைஞரின் கனவு இல்லம்,
- வடசென்னை வளர்ச்சித் திட்டம்

- எனத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையிலும், இந்தியாவின் பிற மாநிலங்கள் தமிழ்நாட்டைப் பார்த்து பின்பற்றக்கூடிய முறையிலும் திறன்மிக்க ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைத் திட்டங்களை, அவற்றால் பயன் பெற்றுள்ள மக்களிடம் எடுத்துரைத்து 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றியை உறுதி செய்வோம் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 7**

**தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையாக மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள துணை முதலமைச்சர் - இளம் தலைவர் அவர்களின் பணி தொடரத் துணை நிற்போம்!**

மாநில இளைஞர் அணிச் செயலாளராக மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பு ஏற்றதும் கழகத்தில் புதிய இரத்தம் பாய்ச்சும் விதத்தில் பயிற்சிப் பாசறைகளை நடத்தியும், அதன் தொடர்ச்சியாக சுமார் 200 இளம் பேச்சாளர்களை உருவாக்கி மாநிலம் முழுவதும் பொதுக்கூட்ட பரப்புரைகளில் பங்கேற்கச் செய்தும், தொகுதி தோறும் கலைஞர் நூலகங்கள் எனத் தற்போது வரை 100-க்கும் அதிகமான நூலகங்கள் இளைஞர் அணியால் உருவாக்கப்பட்டுள்ளன. முத்தமிழறிஞர் பதிப்பகம் ஏற்படுத்தி அதன் மூலம் 20-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியீடு; இளம் பேச்சாளர்கள் பயிற்சி முகாம்கள், தொகுதிதோறும் பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டங்கள் நடத்தி வருவது; இளைஞர் அறக்கட்டளை மூலம் மாதந்தோறும் நலிந்தோர் சுமார் 15 பேர்க்குக் குறையாமல் கல்வி, மருத்துவ நிதி அளித்து உதவி வருவது,

இளைஞர் அணி சார்பில் முரசொலி ஏட்டில் நாள் தோறும் ‘பாசறைப் பக்கம்’ எனும் தலைப்பில் ஒருபக்க அளவில் திராவிட இயக்க வரலாறுகளையும், கழக இலட்சியப் பயணத்தின் தியாக வரலாற்றையும் உயிரோட்டத்துடன் பதிவு செய்து வருவது போன்ற சிறப்பான பணிகளை இளைஞர் அணிச் செயலாளரான மாண்புமிகு துணை முதலமைச்சர் செய்து வருகிறார். திராவிட மாடல் அரசின் அமைச்சரவையில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாக நின்று, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்தை நேர்த்தியான முறையில் மேற்கொள்வதுடன், தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தி, பல்வேறு போட்டிகளை நடத்தி, விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கான வேலைவாய்ப்பையும் உறுதி செய்து, வலிமைமிக்க இளைய சமுதாயத்தை உருவாக்கி வரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் - கழகத்தின் இளம் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செம்மாந்த பணிக்குத் துணை நிற்போம் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.



மதுரையில் கழகப் பொதுக்குழு மேடையில் வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**தீர்மானம் : 8**

**ஏழை-எளிய மக்களை வதைக்கும் நகைக் கடன் கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி உடனே நீக்க வேண்டும்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நெருக்கமான கார்ப்பரேட் முதலாளிகளுக்குக் கடன் வழங்குவதில் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு வரும் நிலையில், உழவர்கள் - மாணவர்கள் உள்ளிட்டோரின் கடன் தொடர்பாகக் கெடுபிடியான நடைமுறைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், ஏழை-எளிய மக்கள் தங்கள் அவசரத் தேவைகளுக்காக வங்கியில் கடன் பெறுவதற்குத் தங்களிடமுள்ள தங்க நகைகளையே நம்பியுள்ள நிலையில், கடனில் உள்ள நகைகளை மறு அடகு வைப்பதற்கு முழுத் தொகையையும் கட்ட வேண்டும் என்றும், அடமானம் வைக்கப்படும் தங்க நகைகளின் உரிமை குறித்த ஆவணம் கட்டாயம் என்றும், தங்க நகையின் மதிப்பில் 75% மட்டுமே கடனாக வழங்கப்படும் என்றும் ரிசர்வ் வங்கி முன்மொழிந்துள்ள கட்டுப்பாடுகள் இந்தியாவில் வாழும் ஏழை-எளிய மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடியதாகும். குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வங்கிகளுக்குப் பதில், அதிக வட்டி வசூலிக்கும் தனியார் முதலாளிகளுக்கு லாபம் தரக்கூடிய இந்தக் கெடுபிடிகளை, ஒன்றிய அரசு வலியுறுத்தி, ரிசர்வ் வங்கியைத் திரும்பப் பெறச் செய்து, பழைய முறையிலேயே தங்க நகைக் கடன் பெற ஆவன செய்ய வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய நிதியமைச்சர் அவர்களுக்கும், ரிசர்வ் வங்கி ஆளுநருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவரது கோரிக்கையையும் - மக்களிடம் எழுந்த எதிர்ப்பையும் அடுத்து, அதிலிருந்து சற்றே பின்வாங்கியிருக்கின்றனர். ஆனாலும், ரூ.2 இலட்சத்திற்கும் மேலான கடன்களுக்கு முன்மொழியப்பட்டு விதிமுறைகள் பொருந்தும் என்றளவில் தற்போது உள்ளது. எனவே, உச்சவரம்பை நீக்கிட வேண்டும் எனவும் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்று உரிய தீர்வை வழங்கி ஏழை, நடுத்தர மக்களின் இன்னலைப் போக்கிட வேண்டும் என இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் : 9**

**தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!**

மும்மொழிக் கொள்கையை வலியுறுத்தும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசின் கல்வி நிதி ரூபாய் 2,152 கோடி வழங்கப்படும் என்று மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான பா.ஜ.க. அரசின் நிலைப்பாட்டை, இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருக்கும் தமிழ்நாட்டில் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரகடனப்படுத்தி எச்சரிக்கை செய்துள்ளார். ஒத்திசைவுப் பட்டியலிலுள்ள கல்வித்துறையை ஒட்டுமொத்தமாக கபளீகரம் செய்ய நினைக்கும் ஒன்றிய அரசுக்கும் அது வலியுறுத்தும் தேசிய கல்விக் கொள்கைக்கும் எதிரான சட்டப்போராட்டத்தையும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கியிருக்கிறார். பாரபட்சமாகச் செயல்படும் ஒன்றிய அரசை இந்தப் பொதுக்குழு கண்டிக்கிறது.

அதோடு, 15-ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய வரிவருவாய்ப் பங்கினை 41% -ஆக வழங்காமல், 33.16% மட்டுமே வழங்கும் ஒன்றிய அரசைக் கண்டிப்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஆயோக் கூட்டத்தில் வலியுறுத்தியபடி, வரிப் பகிர்வின் பங்கை 50%-ஆக உயர்த்திட வேண்டும் எனவும் இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது!



**இளைஞர் அணி சார்பில் ‘முரசொலி’ ஏட்டில் நாள் தோறும் ‘பாசறைப் பக்கம்’ எனும் தலைப்பில் ஒருபக்க அளவில் திராவிட இயக்க வரலாறுகளையும், கழக இலட்சியப் பயணத்தின் தியாக வரலாற்றையும் உயிரோட்டத்துடன் பதிவு செய்து வருவது போன்ற சிறப்பான பணிகளை இளைஞர் அணிச் செயலாளரான மாண்புமிகு துணை முதலமைச்சர் செய்து வருகிறார். திராவிட மாடல் அரசின் அமைச்சரவையில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாக நின்று, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்தை நேர்த்தியான முறையில் மேற்கொள்வதுடன், தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தி, பல்வேறு போட்டிகளை நடத்தி, விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கான வேலைவாய்ப்பையும் உறுதி செய்து, வலிமைமிக்க இளைய சமுதாயத்தை உருவாக்கி வரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் - கழகத்தின் இளம் தலைவர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செம்மாந்த பணிக்குத் துணை நிற்போம் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.**

**தீர்மானம் : 10**

**தமிழர்களின் மொழி உணர்வுடன் விளையாடாமல் இந்தித் திணிப்பைக் கைவிடுக!**

பள்ளிகளில் மும்மொழித் திட்டம், ஒன்றிய அரசு அலுவலகங்களில் இந்தி ஆதிக்கம், ஒன்றிய அரசு நிறுவனங்களில் மாநில மொழிகளுக்கு இடமின்றி இந்தி பேசுவோரையே நியமிப்பது, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு இந்தி-சமஸ்கிருதப் பெயர்கள் என எல்லா வகையிலும் இந்தித் திணிப்பை மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொண்டு வருவது இந்தியாவின் பன்முகத் தன்மை கொண்ட மொழி - பண்பாட்டிற்குப் பேராபத்தை விளைவிக்கக் கூடியதாகும். இந்தி மொழித் திணிப்பால் கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவில் 52 மொழிகள் அழிந்து விளிம்பு நிலையில் உள்ளன என்றும், இந்தி பெல்ட்டு பகுதியில் 25 மொழிகள் அழிந்து போயின என்றும், வழக்கில் இல்லாத சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு ரூபாய் 1488 கோடியும், எட்டு கோடி மக்கள் பேசும் தமிழுக்கு ரூபாய் 74 கோடி மட்டுமே ஒன்றிய அரசு ஒதுக்கி உள்ளது என்றும் ஒன்றிய அரசை எதிர்த்துக் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கண்டித்து வருகிறார்.

ஒன்றிய அரசின் 97 துறைகளில் வெறும் 16 துறைகளில் மட்டும்தான் இந்தியும், ஆங்கிலமும் உள்ளன. மற்ற துறைகளில் இந்தி மட்டும் ஆட்சி செய்கிறது. இந்தச் சூழலில் மேலும் இந்தித்திணிப்பை மேற்கொண்டு, மொழிச் சமத்துவத்தை அழித்து, மீண்டும் ஒரு மொழிப் போரை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளது. இதனை ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் உறுதியுடன் எதிர்த்து நின்று, தமிழை மட்டுமின்றி அந்தந்த மாநில மொழிகளின் உரிமையையும் நிலைநாட்டும் செயல்பாடுகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்கும். இந்தியையும் அதன் அடுத்த கட்டமாக சமஸ்கிருதத்தையும் திணிக்க முயற்சி செய்யும் ஒன்றிய அரசினைக் கண்டிக்கிறது.

**தீர்மானம் : 11**

**கீழடி ஆய்வை மறுக்கும் தமிழ் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்!**

தமிழ்மொழி - தமிழ்ப் பண்பாடு ஆகியவை காலத்தால் முந்தையவை என்பதை அகழாய்வுகளும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகின்றன. 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தாதிலிருந்து இரும்புப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிற வரலாற்று உண்மை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகள் மூலமாக நிறுவப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு ஆதாரப்பூர்வமாக வெளியிட்டும்கூட, அதற்கு இந்தியப் பிரதமரோ, இந்திய தொல்லியல்துறையோ வாழ்த்துகூட தெரிவிக்கவில்லை. இந்தப் பொதுக்குழு நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதற்கான தரவுகள் கிடைக்கப்பெற்று அவை உலகளாவிய ஆய்வு நிலையங்கள் மூலமாகவும் நிறுவப்பட்டிருப்பதைத் தொல்லியல் துறை சார்பில் அதன் அதிகாரியாக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்து ஆண்டுகளாகியும் அதனை ஏற்காமல், திருத்தங்கள் தேவை என ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தெரிவித்திருப்பது, தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாட்டின் மீதும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குள்ள வன்மத்தையே காட்டுகிறது. தங்களின் பொய்யான - கற்பனையான சமஸ்கிருத-சரஸ்வதி ஆற்று நாகரிகத்தை, தமிழர்களின் வைகை ஆற்று - கீழடி ஆய்வுகள் உண்மைத் தரவுகளுடன் மிஞ்சிவிட்டன என்ற காழ்ப்புணர்விலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளிவந்து, கீழடி ஆய்வறிக்கையை ஏற்று, இந்தியாவின் பெருமைமிகு நாகரிகமாகத் தமிழரின் நாகரிகத்தை அறிவிக்க வேண்டும் என இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

கீழடி தமிழரின் தாய்மடி! பரந்துபட்ட பார்வையோடு - அறிவியல் பூர்வமாக எங்களது தொன்மையை நிறுவுகிறோம். இதில் ஆணவ - ஆதிக்க அரசியல் செய்ய நினைத்தால், அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அரசை இப்பொதுக்குழு எச்சரிக்கிறது!

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# நிதி தர மறுக்கும் ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!